# රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
# பதிவாளர் நாயகம் திணைக்களம்
# REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. : RG/AB/02/05/59-IV(ARG බඳවාගැනීම් 2025)

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. : 565

ඔබේ අංකය / உமது இல. / Your No. :

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date : 2024.03.07


சகல உதவிப் பதிவாளர் நாயகங்களுக்கும்,

**<u>பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிறைவேற்று அதிகாரி வகுதியின் வகுப்பு I தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட திறமை அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட உதவிப் பதிவாளர் நாயகம் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை – 2024</u>**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிறைவேற்று அதிகாரி வகுதியின் வகுப்பு I தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை இவ்வருடம் நடைபெறவுள்ளது.

02. குறித்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றும் சகல உத்தியோகத்தர்களும் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி, 2024.03.28ம் திகதிக்கு முன்னர் "பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். விண்ணப்பப் படிவத்தை இடும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "**பதிவாளர் சேவையின் நிறைவேற்று அதிகாரி வகுதியின் வகுப்பு I தரம் III இற்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை**" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. பரீட்சை நடாத்துவதுடன் தொடர்புடைய பின்வரும் நிபந்தனைகள் வலுவிலிருக்கும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

I. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட திகதியின் பின்னர் மொழி மூலம் மாற்றம் செய்யப்படாது.

II. இந்தப் பரீட்சைக்கான பெறுபேறுகள் மீள் பரிசோதனை செய்யப்படாது என்பதோடு, பெறுபேறுகள் தொடர்பாக ஏதும் விசாரணைகள் இருப்பின் அவை பெறுபேறுகள் வெளியான ஒரு மாதத்திற்குள் முன்வைக்கப்படல் வேண்டும்.

III. விண்ணப்பத்தில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் மொழி மூலம் ஆகியன சரியாகக் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதோடு, அது பரீட்சை மண்டபத்தில் பயன்படுத்தப்படும் தேசிய அடையாள அட்டை இலக்கமாக இருத்தல் வேண்டும். ஏதும் காரணத்தினால் வேறு இலக்கம் உள்ளிடப்பட்டிருப்பின், குறித்த விண்ணப்பதாரரின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்படும்.

04. வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை தொடர்பான பாடத்திட்டத்தை உள்ளடக்கிய பதிவாளர் சேவையின் நிறைவேற்று அதிகாரி வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் "ஆ" பின்னிணைப்பின் பிரதியொன்றும் தங்களின் தகவலுக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஏ.எச்.எல். டி சொய்சா,
சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் (நிர்வாகம்)
பதிவாளர் நாயகம் சார்பாக

தொலைபேசி : 0112-072038
பெக்ஸ் : 0112-889493
மின்னஞ்சல் : sdrgadmin@rgd.gov.lk